# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 75/மா/2023**

**நாள் : 17.07.2023**

திரு. R. மணிகண்டன்,
கரூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கரூர் மாநகராட்சி, கரூர். – எதிர்மனுதாரர்

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. மணிகண்டன் என்பவரின் 22.03.2023 நாளிட்ட மனு, 27.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 75/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர், தாந்தோன்றிமலை, பாரதிதாசன் நகர், நான்காவது தெரு, கதவு எண்.69I/7E4, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மணிகண்டன் என்பவர் தனது 22.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" K.M.வேலுச்சாமி என்ற நபர், 44வது வார்டில், பொன்நகரில் உள்ள தனக்கு சொந்தமான மனை எண.Plot No.60, 1,200 சதுர அடி அளவுள்ள தனது இடத்தில், 15 ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சியிடம் Vacant Land Property Tax செலுத்தாமல், மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட Building Plan Approval மற்றும் வரைபட Layout Approval ஆகிய அனுமதி பெறாமல், சுமார் 30 x 20 = 600 சதுர அடி அளவுள்ள கட்டிடத்தை கட்டியுள்ளார். இதன் மூலம் தனக்கு தெரிந்தே முறைகேடு செய்து கட்டிடத்தை கட்டியுள்ளார்.

மேலே குறிப்பிட்ட, பொன்நகரில் உள்ள Plot No.60, 1,200 சதுர அடி அளவு உள்ளது. இதில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் (வரி விதிப்பு எண்.082/044/901159, 082/044/901160, 082/044/900920, 082/044/900921) 600 Square feet அளவுள்ள கட்டிடம்

மட்டுமே மாநகராட்சியால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் 600 sqft தனக்கு தெரிந்தே முறைகேடு செய்து கட்டிடத்தை கட்டியுள்ளார்.

மாநகராட்சியிடம் எவ்வித முறையான கட்டிட (Building Plan approval) மற்றும் வரைபட (Layout approval) ஆகிய அனுமதி பெறாமல், 30 x 20 = 600 சதுர அடி அளவுள்ள கட்டிடத்தை கட்டியதோடு மட்டுமல்லாமல், மாநகராட்சிக்கு இதன் மூலம் வருவாய் இழப்பு ஏற்படுத்தியிருக்கிறார்.

எவ்வித முறையான கட்டிட (Building Plan approval) மற்றும் வரைபட (Layout Approval) அனுமதி பெறாமல் கட்டப்பட்ட, சுமார் 30 x 20 = 600 Sq.feet அளவுள்ள கட்டிடத்திற்கு சீல்வைத்து உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் 15ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத உரிய அதிகாரிகளின் மீது Tamil Nadu Civil Services (Discipline and Appeal ) Rules-ன் படி, ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் இதர சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்படியும், தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். உரிய ஆதாரங்களை இத்துடன் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கரூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) கரூர் மாநகராட்சி ஆணையர் தனது 02.05.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" திரு கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு கரூர் மாநகராட்சி மூலம் 20.04.2023ம் தேதியில் அறிவிப்பு அனுப்பி 25.04.2023ம் தேதி பதில் பெறப்பட்டது. இதில் நான்கு வரிவிதிப்புகள் உள்ளது. அதில் மனை எண்.60ல் உள்ள கட்டிடத்திற்கு சொத்து வரி விதிப்பு எண்.082/044/901159 அரையாண்டிற்கு வரி தொகை ரூ.436/– வரி விதிப்பு எண். 082/044/901160 அரையாண்டிற்கு வரி தொகை ரூ.436/–, வரிவிதிப்புஎண்.082/044/900921 அரையாண்டிற்கு வரி தொகை ரூ.436/– மற்றும் வரி விதிப்பு எண்.082/044/900920 அரையாண்டிற்கு வரி தொகை ரூ.436/– ஆகும். மனை எண்.60ல் தாந்தோன்றி கிராமம் சர்வே எண்.561/1ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு ஆகும். இம்மனையில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் 20ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓட்டுக்கூரை கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற விபரங்கள் ஏதும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது புதிய கட்டுமானம் ஏதும் கட்டப்படவில்லை.

ஏற்கனவே மாநகராட்சிக்கு புகார் அளித்ததில் முறையான பதில் தரப்பட்டும், நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் எவ்விதமான காலதாமதம் இல்லையென தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் அதே இடத்தில் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார். தற்போது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நிலவும் பகையால் இப்புகாரை அளித்துள்ளார்.

மேலும் இருதரப்பினருக்குள் கரூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.86/2023 என்ற சிவில் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று முறைமன்ற நடுவம் முறையீட்டு மனுவில் (எண்.75/C/2023) உள்ள புகாரை தள்ளுபடி செய்து உரிய நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"கரூர் மாவட்டம், கரூர் மாநகராட்சி வார்டு எண்.44, பொன்நகரில் திரு.கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு சொந்தமான மனை எண்.60–ல், 1,200 சதுர அடி கொண்ட இடத்தில் மாநகராட்சி அனுமதி எதுவும் பெறாமல் 15 ஆண்டுகளுக்கு முன்னர் 600 சதுர அடி அளவில் கட்டடம் கட்டியுள்ளார். மாநகராட்சியின் ஒப்புதல் இல்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டும் எவ்வித பதிலும் என்னால் பெறப்படவில்லை. எனவே, அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநகராட்சியின் மீதான எனது குற்றச்சாட்டுக்கள் குறித்து என்னால் சமர்ப்பிக்கப்படும் 15.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மேலும் மனுதாரர் தனது 15.6.2023 நாளிட்ட அறிக்கையில் மற்றவற்றிற்கிடையில், தான் இம்முறைமன்ற நடுவத்திற்கு 22.3.2023 நாளிட்ட மனு அளித்த பிறகே சொத்து வரி உயர்த்தி விதிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் 15 ஆண்டுகளாக நடவடிக்கை ஏதும் எடுக்காத அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

**7) கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 15.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள வார்டு எண்.44 பொன் நகர் மனை எண்.60ல் உள்ள 1,200 சதுர அடி இடத்தில் 600 சதுர அடி கொண்ட கட்டிடம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதாகவும், அக்கட்டடத்திற்கு மாநகராட்சியால் வரி விதிப்பு ஏதும்

செய்யப்படவில்லை எனவும் குறிப்பிட்டு மேற்கண்ட கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுத்திட புகார் மனு அளித்திருந்தார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனை எண்.60ல் உள்ள கட்டடத்திற்கு சொத்துவரி விதிப்பு எண்.082/044/901159 அரையாண்டிற்கு ரூ.436/– சொத்துவரி விதிப்பு எண்.082/044/901160 அரையாண்டிற்கு வரித்தொகை ரூ.436/– சொத்துவரி விதிப்பு எண்.082/044/900920 அரையாண்டிற்கு வரித்தொகை ரூ.436/– மற்றும் சொத்துவரி விதிப்பு எண்.082/044/900921 அரையாண்டிற்கு வரித்தொகை ரூ.436/– என சொத்து வரி விதிக்கப்பட்டு நாளது தேதி வரை சொத்து வரி செலுத்தியதற்கான சொத்துவரியின் ரசீதின் நகல்களை சமர்ப்பித்துள்ளேன் என்பதையும், மேலும் மேற்கண்ட கட்டடம் புதிதாக கட்டப்படாமல், 15ஆண்டுகளுக்கு முன்பு ஒப்புதல் பெறாமல் கட்டப்பட்டதால், மேற்கண்ட பழைய கட்டடத்தின் மீது மாநகராட்சியால் விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) இந்நேர்வில் மனுதாரரின் மனு, வாக்குமூலம், கரூர் மாநகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

மனுதாரர் கரூர் மாவட்டம், கரூர் மாநகராட்சி வார்டு எண்.44, பொன்நகரில் திரு.கே.எம்.வேலுச்சாமி என்பவருக்கு சொந்தமான மனை எண்.60–ல், 1,200 சதுர அடி கொண்ட இடத்தில் மாநகராட்சி அனுமதி எதுவும் பெறாமல் 15 ஆண்டுகளுக்கு முன்னர் 600 சதுர அடி அளவில் கட்டடம் கட்டியுள்ளார். மாநகராட்சியின் ஒப்புதல் இல்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டும் எவ்வித பதிலும் என்னால் பெறப்படவில்லை. எனவே, மேற்கண்ட கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தனது மனுவில் கோரியுள்ளார்.

மேற்கண்ட புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள மனை எண்.60ல் உள்ள கட்டடத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. இது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு என்றும் இதில் கட்டப்பட்டுள்ள கட்டடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓட்டுக்கூரை என்றும் கட்டடத்திற்கு அனுமதி பெற்ற விவரங்கள் திரு.கே.எம். வேலுச்சாமியால் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும் கரூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள இடத்தில் 20 ஆண்டுகளாக 600 சதுர அடி கட்டடம் உள்ளது. இது அனுமதியின்றி கட்டப்பட்ட ஒன்று. கரூர் மாநகராட்சி ஆணையரும், கரூர் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளரும் முறையே தங்களுடைய அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் மனுதாரரால் குறிப்பிடப்படும் கட்டடம் 20ஆண்டுகளுக்கு முன்பே கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். திரு. கே.எம்.வேலுச்சாமி அவரது சொத்து வரியை தாந்தோணி நகராட்சியானது கரூர் நகராட்சியுடன் இணைக்கப்பெற்ற 24.10.2011க்கு முன்பே வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் தற்போது வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பது

மாநகராட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக எந்தவித ஆவணங்களும் மாநகராட்சி சார்பில் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. திரு.கே.எம்.வேலுச்சாமி 31.01.2023 அன்று செலுத்திய இரசீது மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 04.05.2023 அன்று சொத்து வரிக்கான கேட்பு அறிவிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் உள்ளதை அறியமுடிகிறது. கரூர் மாநகராட்சியின் அலுவலர்கள் தங்கள் கடமையை சரிவர செய்யவில்லை என்பதே இதற்கு காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இதுநாள் வரை அந்த கட்டடம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்படாததுடன் வரிகள் விதிக்கப்பட்டது குறித்து எந்த ஆவணங்களும் முழுமையாக சமர்ப்பிக்கவில்லை. அது தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படவும் இல்லை. மாநகராட்சி அலுவலர்கள் சரிவர தங்கள் கடமையை செய்திருந்தால் இந்நிகழ்வுகள் நடைபெற வாய்ப்பில்லை. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக்கண்டிக்கிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

கரூர் மாநகராட்சியில் பொன் நகர், 44–வது வார்டு மனை எண்.60–ல் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாநகராட்சி விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் முறையாக சொத்து வரி விதிக்காமல் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படக் காரணமாக இருந்துள்ள சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The loss of revenue of Property Tax and other taxes for so many years that should have accrued to the Local Body and the callous inaction, indifference and complicity of the Corporation field officials are severely condemned by this Forum. The field officials concerned who are delinquents in the issue, should be charge sheeted in accordance with the Government servants' conduct rules. The loss of income to the Local Body should be appropriately worked out and recovered from the building owner who obviously had not submitted any building plan approval to the Corporation as per the report of the Commissioner. Action under Town and Country Planning Act should be launched against the building owner for non-compliance with the rules and regulations of Building Constructions. The Corporation cannot disown its responsibility by pleading that a civil case is pending in the court and thereby washing off its responsibility as a clever ruse to hoodwink the system. Had the field officials of the Corporation been sincere and efficient, this type of violation and

visible loss of revenue to its exchequer could have been avoided. Hence, the DMA is directed to issue suitable instruction to all the Corporations to avert this kind of recurrence elsewhere due to the negligence and complicity of the field officials. The DMA is also directed to rebuke the Commissioner, Karur Corporation for default in this case. An action taken report may be sent to this Forum in the next 60 days.

The Court case has nothing to do with the contents of the allegations raised by the petitioner and the Commissioner's contention is irrelevant and deviant. This escapist, elusive and evasive conduct of the Commissioner is viewed with displeasure by this Forum and is censured.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மணிகண்டன்,
   கதவுஎண்.69I/7E4,
   நான்காவது தெரு,
   பாரதிதாசன் நகர்,
   தாந்தோன்றிமலை,
   கரூர்.

2. ஆணையர்,
   கரூர் மாநகராட்சி,
   கரூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்(முகூபொ)